வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவணக்குமார்

தேதி 22.3.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

சர்வதேச தண்ணீர் தினத்தை முன்னிட்டு நீர் சேமிப்பின் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும்,120 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி, வரும் 30 ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ளது.

பீகார் உதய தினத்தை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

18 ஆவது ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் இன்றிரவு தொடங்குகின்றன.

*நீர் தினம்* 1 (18)

நீர் சேமிப்பின் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வலியுறுத்தி உள்ளார். சர்வதேச தண்ணீர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிர்கால சந்ததியினர் நலனை பாதுகாப்பதில் நீர் சேமிப்பு முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நீர் சேமிப்பு மக்கள் இயக்கமாக

உருவெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். நீர் சேமிப்பில் சாதனை படைத்தவர்கள் குறித்து அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் தமது மனதின் குரல் உரையிலும் பிரதமர் எடுத்துரைத்து வருகிறார். மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் பணியாற்றும் பெண்கள், மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மகாநதி ஆற்றில் நீர் செரிவூட்டும் கிணறுகளை அமைத்தனர். இதன் காரணமாக கடந்த 6 ஆண்டுகளாக இந்த நதியில் வற்றாது நீர் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். சர்வதேச தண்ணீர் தினத்தை ஒட்டி, மத்திய நீர் வளத்துறை அமைச்சர் திரு சி ஆர். பாட்டேல் விடுத்துள்ள செய்தியில், நீர் சேமிப்பு என்பது கொள்கையாக மற்றும் இன்றி, மக்கள் இயக்கமாகவும் உருவெடுத்ததற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட

*நீர் தினம்* 2 (17)

நடவடிக்கைகளே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். சமூக ஊடகத்தில் விடுத்துள்ள இந்த செய்தியில், நீர் ஆதாரங்களை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பட்டியலிட்டுள்ளார். இந்நாளில் நீர் சேமிப்பது என்ற உறுதி மொழியை அனைவரும் ஏற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். இந்நாளை ஒட்டி, நாடு முழுவதும் 148 மாவட்டங்களில் மழை நீர் சேமிப்பிற்கான இயக்கத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளது.

மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் மூலமான, 6ஆம் கட்ட, மழை நீர்ப்பிடிப்பு இயக்கம், ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் இன்று தொடங்கியது. தொடக்க விழாவில், மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி, மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திருமதி சுருதி சௌத்ரி உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பிரதமர் திரு, நரேந்திர மோடியின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், 2019ஆம் ஆண்டு, தொடக்கி வைக்கப்பட்ட ஜல் சக்தி இயக்கம், மழை நீர் சேமிப்பு, மழை நீரின் மறு பயன்பாடு மற்றும் நீர் நிலைகளை புத்தாக்கம் செய்வதில் முக்கிய பங்காற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

*நீர் தினம்* 3 (7)

உலகின் மிகப் பெரிய சுற்றுச்சூழல் இயக்கமான எர்த் ஹவரில் நீர் பாதுகாப்பில் கவனம் செலுத்தி இந்தியா இன்று அந்த இயக்கத்துடன் இணைகிறது. உலக நீர் தினத்துடன் இணைந்து நாடு முழுவதும் நீர் சேமிப்பு குறித்து மக்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த இயக்கம் செயல்படுகிறது. காலநிலை மாற்ற விளைவுகள், உலக நீர் வளத்தின் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் தியா மிர்சா கூறியுள்ளார்.

*மன் கீ பாத்* (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் வரும் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இது மனதின் குரல் நிகழ்ச்சியின் 120 ஆவது அத்தியாயம் ஆகும். இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் ஆகியவற்றின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். Air செய்திகள், DD செய்திகள் மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் Youtube சேனல்களிலும் நேரடியாக ஒலிபரப்ப கேட்கலாம். நிகழ்ச்சியைத் தொடர்ந்து அதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

*சாவித்திரி தாக்கூர்*(9)

நாடு முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு விரைவு நீதிமன்றங்கள் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளதாக மகளிர் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் கூறியுள்ளார். மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர் 754 விரைவு நீதிமன்றங்கள் மூலம் இந்த வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

*பீகார் தினம்* (11)

பீகார் உதய தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் வளர்ச்சியடைந்த பீகாரை உருவாக்குவதற்கு அம்மாநில மக்கள் தொடர்ந்து பாடுபடுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், பீகாரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார். நாட்டின் வளர்ச்சியில் கடின உழைப்புக்கு சொந்தமான பீகார் மக்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரோ (12)

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் வி நாராயணன், ஒரு இந்தியரை நிலவுக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாக மீண்டும் கொண்டு வரும் பணியில் தங்கள் அமைப்பு செயல்பட்டு வருவதாக கூறினார். இதற்கான வழிகாட்டுதல்களை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்கியுள்ளார் என்றும், 2040 க்குள் இஸ்ரோ இந்த பணியை நிறைவேற்றும் என்றும் அவர் கூறினார். மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவிற்கென சொந்தமாக விண்வெளி நிலையம் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். இந்திய விண்வெளி திட்டத்தின் ஊக்கமளிக்கும் திட்டம் பற்றி பேசுகையில், செவ்வாய் கிரக சுற்றுப்பாதை பயணத்தை முதல் முயற்சியிலேயே வெற்றிகரமாக முடித்த ஒரே விண்வெளி அமைப்பு, அதுவும் ஒரே ராக்கெட்டை பயன்படுத்தி பல சாதனைகளை இந்தியா பெற்றுள்ளது என்று கூறினார்.

வரி ஏய்ப்பு (14)

வரி ஏய்ப்பை தடுக்க சட்ட விரோத இணைய வழி விளையாட்டு நிறுவனங்கள் மீது சரக்கு மற்றும் சேவை வரி நுண்ணறிவு தலைமை இயக்குனரகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இணையவழி பண சூதாட்டம், பந்தயம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சுமார் 700 வெளிநாட்டு நிறுவனங்களை கண்காணித்ததில் இந்த நிறுவனங்கள் ஜிஎஸ்டி யில் பதிவு செய்ய தவறியதன் மூலமும், வரி செலுத்த வேண்டிய தொகைகளை

மறைப்பதன் மூலமும் வரி கடமைகளை தவிர்ப்பதன் மூலமும் சரக்கு மற்றும் சேவை வரியை ஏய்ப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, 357 பதிவு செய்யப்படாத இணைய வழி பண விளையாட்டு நிறுவனங்களின் இணையதளங்கள், மின்னனுவியல், தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புடன் தொடக்கப் பட்டுள்ளது. மேலும், சட்ட விரோத கேமிங் தளங்களுக்கு எதிரான சமீபத்திய நடவடிக்கையில் பங்கேற்பாளர்களிடம் இருந்து பணம் வசூலிக்க பயன்படுத்தப்படும் வங்கி கணக்குகளை இந்த இயக்குனரகம் முடக்கி உள்ளது.

ஜிடிபி (7)

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 105 சதவிகித வளர்ச்சியுடன் இரட்டிப்பாக்கி உள்ளது. சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி அமெரிக்கா, சீனா, ஜெர்மனி மற்றும் ஜப்பானுக்கு பிறகு இந்தியா தற்போது 5 ஆவது உலகின் பெரிய பொருளாதார நாடாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஜப்பானில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முன்னேற்றம் அடையாததால் இந்தியா விரைவில் ஜப்பானை முந்தும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் (8)

பேரிடர் காலங்களில் ஒரு உயிரிழப்பு கூட ஏற்படக் கூடாது என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் இதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருவதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. பேரிடர் குறித்த தகவல்களை முன் கூட்டியே வழங்குவது பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக நிவாரண உதவிகளை மேற்கொள்வது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

*புதுச்சேரி 3 சக்கர வாகனம்* (6)

புதுச்சேரி அரசு சமூக நலத்துறை மூலம் இந்திராநகர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 11 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு புதுச்சேரி அரசின் விலையில்லா 3 சக்கர வாகனத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி மற்றும் அரசு கொறடா திரு ஏ.கே.டி ஆறுமுகம் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சமூக நலத்துறை இயக்குனர் திருமதி ராகினி, துணை இயக்குநர் திரு ஆறுமுகம் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

*நமீபியா* (6)

தென்னாப்பிரிக்க நாடான நமீபியாவின் முதல் பெண் அதிபராக 72 வயதான நெடும்போ நந்தி ந்தைத்துவா இன்று பதவி ஏற்றார். அந்நாட்டு துணை அதிபராகவும், வெளியுறவு அமைச்சராகவும் பல்வேறு பொறுப்புகளை அவர் முன்னதாக வகித்திருந்தார் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் பதவிக்கான தேர்தலில் 58 சதவிகித வாக்குகளை பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது..

*கேலோ இந்தியா* (16)

2025 ன் கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகள் புதுடெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாடு முழுவதிலும் இருந்து விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து தங்களது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். இப்போட்டி பாரா விளையாட்டுகளின் ஒரு பெரிய கொண்டாட்டமாக திகழ்கிறது.

பெண்களுக்கான ஈட்டி எறிதல் பிரிவில் பாக்கியாஸ்ரீ மத் ஜாதவ் தங்கப் பதக்கத்தையும், தீபிகா ராணி வெள்ளிப் பதக்கத்தையும், அக்ஷயா வெண்கல பதக்கத்தையும் வென்றுள்ளனர். மேலும், ஆண்களுக்கான வட்டு எறிதல் பிரிவில், பீர் பத்ரசிங் தங்கப்பதக்கத்தையும், ஆதேஷ் பதி வெள்ளிப்பதக்கத்தையும், ராமானுஜ் குமார் வெண்கல பதக்கத்தையும் வென்றனர். பெண்களுக்கான நீளம் தாண்டுதல் பிரிவில் புவி அகர்வால் தங்கப் பதக்கத்தையும், நித்யா வெள்ளிப் தக்கத்தையும், பூஜா வெண்கல பதக்கத்தையும் வென்றுள்ளனர். இன்று மாலை வரையிலான ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் அரியானா 9 தங்கங்களுடன் முதலிடத்திலும், தமிழ்நாடு 9 தங்கப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், உத்திரபிரதேசம் 6 தங்கப் பதக்கங்களுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளது.

*கிரிக்கெட் (6)*

18 ஆவது ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன. கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி-பெங்களுரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியை எதிர்கொள்கிறது. மேலும், சென்னை சேப்பாக்கம் விளையாட்டு அரங்கில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதல் போட்டியில் நாளை மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதுகிறது.

*வானிலை (6)*

வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் நீலகிரி, திருப்பூர், தேனீ, திண்டுக்கல், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் கடலோர பகுதிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.